# TNPSC குரூப்- VII & VIII தேர்வு

## இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் பணி மற்றும் சைவமும் வைணவமும் முக்கிய வினா- விடைகள் தொகுப்பு

www.winmeen.com

1. மதங்கள் இதன் பெயரால் அமைந்துள்ளன
(i) கடவுள் பெயரால் - சைவம், வைணவம்
(ii) நிறுவியவர் பெயரால் - பௌத்தம், ஜைனம்.
(iii) தலைசிறந்த நூலின் பெயரால் - வேதாந்தம், ஸ்மார்த்தம்
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

2. இவற்றில் தவறான கூற்று எது?
A) இந்து மதம் என்பதற்கு அன்பு மதம் என்று பொருள்
B) அன்பிற்கு அடிப்படை அஹிம்சை ஆகும்
C) இந்துமதம் ஆற்றின் பெயரால் ஏற்பட்டது
D) இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காது உறைகிறான்.

3. இந்து மதம் என்பதற்கு
A) சநாதனதர்மம் என்பது வேறு பெயர்
B) சநாதனதர்மம் என்பது அழிவிலா அறம் என்பது பொருளாகும்.
C) சமயம் என்பதற்கு சமை என்பது பகுதி
D) இவை அனைத்தும் சரியானவை

4. இந்து மதத்தை இந்த பெயரால் வழங்குவது இல்லை
A) திருநெறி, அருள்நெறி
B) தவநெறி, மெய்ந்நெறி
C) பௌத்தநெறி, சமணநெறி
D) சநாதனதர்மம், சன்மார்க்கம்

5. சமயம்
(i) கண்ணால் காணப்படும் உலகத்தை காட்டும் ஞான ஒளி
(ii) அனுமானத்தால் காட்டும் ஞான ஒளி
(iii) அறியத் தகுந்த ஆன்மாவினை காட்டும் ஞான ஒளி
(iv) இறைவனை இனிது காட்டும் ஞான ஒளி
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) அனைத்தும் சரியானவை
B) (i) மற்றும் (ii)
C) (ii) மற்றும் (iii)
D) (iii) மற்றும் (iv)

6. வேதங்களை நான்காக வகுத்தவர்
A) வியாசர் B) வால்மீகி
C) அகத்தியர் D) பதஞ்சலி

7. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க
(i) வேதம் என்பதற்கு அறிவுநூல் என்பது பொருள்
(ii) கருத்துக்களை அடக்கி வைத்திருப்பதால் வேதம் மறை என ஆனது
(iii) வேதம் ஆசிரியரிடம் கேட்டு தெரிய வேண்டியதால் சுருதி என ஆனது
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

8. கீழ்க்காண்பவற்றுள் எது பொருந்தவில்லை?

| வேதம் | பொருள் |
|---|---|
| A) இருக் | - துதித்தல் |
| B) யஜுர் | - யாகம் |
| C) ஸாமம் | - இன்னிசை |
| D) அதர்வணம் | - தானம் |

9. கீழ்க்கண்டவற்றுள் எது பொருந்தவில்லை?
A) ஸாம வேதம் - இன்னிசையால் பாடப்பெற்றது
B) யஜுர் வேதம் - யாக கிரியை செய்வது
C) இருக் வேதம் - முக்தி பெறும் வழிகள்
D) அதர்வணம் - மந்திரம் உச்சரிப்பு முறை

10. மிகச் சிறப்பு வாய்ந்த சுருத்ரம் இதில் அடங்கியுள்ளது
A) இருக் வேதம் B) யஜுர் வேதம்
C) ஸாம வேதம் D) அதர்வண வேதம்

11. அமாவாசை, பௌர்ணமி எதனுடன் தொடர்புடையவை
A) இசை, பாடல்
B) அனுஷ்டினங்கள், தோத்திரங்கள்
C) மண்டலம், துதி
D) வேள்வி, பிதுர்கர்மம்

12. இருக் வேதம் எத்தனை மண்டலங்களைக் கொண்டது?
A) எட்டு B) பத்து
C) பனிரெண்டு D) பதினைந்து

13. உபநிஷதம் நான்கு வேதப் பிரிவுகளிலிருந்தும் எந்த பாகத்தை சார்ந்தது
A) சமஹிதை B) பிராம்மணம்
C) ஆரணியகம் D) இவை அனைத்தும்

14. உபநிஷதம்
(i) நான்கு வேதப் பிரிவுகளிலிருக்கும் சம்ஹிதை, பிராம்மணம், ஆரிணியம் என்ற பாகங்களைச் சார்ந்தவை

www.winmeen.com

(ii) தந்தையின் அருகில் உட்கார்ந்து அறிந்து கொள்ளப்படும் ஞானம்.

(iii) நூறு உபநிஷத்துள், முக்கியமானவை எட்டு

கூற்றுகளில் சரியானவை எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

15. இவற்றில் மிக முக்கிய உபநிஷத்து எவை?

(i) ஐத்ரேய உபநிஷத், தைத்திரீய உபநிஷத், கடோபநிஷத்

(ii) சுவேதாசுவதரஉபநிஷத், பிருஹதாரண்ய கோபநிஷத், பிரச்னோபநிஷத்

(iii) கேநோபநிஷத், ஈசோபநிஷத், முண்ட கோபநிஷத், சாந்தோக்கிய உபநிஷத்

A) மூன்றும்

B) (i) மற்றும் (ii)

C) (ii) மற்றும் (iii)

D) (i) மட்டும் (iii)

16. பத்து உபநிஷதங்களுக்கு இவர்களில் யார் பாஷ்யம் செய்யவில்லை?

A) ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்

B) ஸ்ரீ வாசுதேவர்

C) இராமானுஜர்

D) வித்யாரணயர், ஆனந்ததீர்த்தர்

17. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க

(i) ஆகமம் என்ற சொல்லை ஆ + கமம் எனப் பிரிக்கலாம்.

(ii) ஆ = ஆன்மாக்களின்; கமம் = பாசங்களை நீக்கம் செய்வது முத்திப் பேற்றை அருளுவது.

(iii) இறைவனது பத்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றினவென்று காரணாகமத்தால் அறிகிறோம்.

கூற்றுகளில் தவறானது எது/எவை?

A) மூன்றும் தவறானவை

B) (i) மட்டும் தவறானது

C) (ii) மட்டும் தவறானது

D) (iii) மட்டும் தவறானது

18. கீழ்க்காண்பவற்றில் பொருத்தமற்ற இணை எது?

ஆகமங்கள்

A) சத்யோஜாத - காமிகம்

B) வாமதேவ - தீப்தம்

C) அகோர - குஷ்மம்

D) தத்புருஷ - ரௌரவம்

19. கீழ்க்காண்பவற்றில் பொருத்தமற்ற இணை எது?

ஆகமங்கள்

A) ஈசான - சந்திரஞானம்

B) தத்புருஷ - மகுடம்

C) அகோர - விஜயம்

D) வாமதேவ - ஸுக்ஷும்

20. இவற்றில் ஈசான முகத்திலிருந்து தோன்றாத ஆமகங்கள் எவை

A) ப்ரோத்கீதம், இலளிதம்

B) விமலம், பிம்பம்

C) சித்தம், சந்தானம் D) கிரணம், வாதுளம்

21. இவற்றில் எது அகோர முகத்திலிருந்து தோன்றிய ஆகமங்கள்

A) நித்வாசம், அநலம் B) பிம்பம், விமலம்

C) அம்சுமான், சுப்ரபேரம்

D) சிந்தியம், காரணம்

22. இருபத்தெட்டு ஆகமங்களுள்

(i) பதினெட்டு அகமங்கள் சிவ பேதங்களாகும்.

(ii) பத்து அகமங்கள் ருத்ர பேதங்களாகும்

(iii) ஆகமங்கள் பூஜைக்குரிய பொருள்களை சேகரித்தலை பற்றி கூறுகின்றன

(iv) ஆகமங்கள் பூஜை முறைகளை கூறுகின்றன

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) அனைத்தும் சரியானவை

B) (i) மற்றும் (ii)

C) (ii) மற்றும் (iii) D) (iii) மற்றும் (iv)

23. இவற்றில் எந்த பாதத்தில் பதி, பசு, பாச இலக்கணங்கள் கூறப்பட்டிருக்கின்றன

A) கிரியாபாதம் B) யோகபாதம்

C) ஞானபாதம் D) கர்ஷணம்பாதம்

24. கிரியாபாதத்தில் கூறப்பட்டுள்ளது

A) கர்ஷணம் முதல் பிரதிஷ்டை வரையில் உள்ள கிரியைகள்

B) நித்திய நைமித்திக பூஜைகளும் திருவிழா முறைகளும்

C) சமய, விசேஷ, நிர்வாண தீட்சை விதிகள்

D) இவை அனைத்தும்

25. ஆகமங்களில் உரைக்கப்பட்டுள்ள தசகாரியங்களது இலக்கணங்கள்

A) தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி

B) ஆத்ம ரூபம், ஆத்ம தரிசனம், ஆத்ம சுத்தி

C) சிவ ரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம்

D) இவை அனைத்தும்

26. ஸ்ரீமந் நாராயணனாகிய விஷ்ணுவை பரதேவதையாகக் கூறும் ஆகமம்?

A) அம்சுமான் ஆகமம் B) நித்வாசம் ஆகமம்

C) வைணவாகமம் D) சைவாகமம்

27. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க

(i) வைணவாகமங்கள் பாஞ்சராத்ராகமம் எனவும் வைகானஸாகமம் எனவும் இருவகைப்படும்.

(ii) பாஞ்சராத்ராகமம் விகனஸர் என்ற மகரிஷியின் மூலமாக உபதேசிக்கப்பட்டது.

(iii) வைகானஸாகமம் பல ரிஷிகளின் மூலமாக உபதேசிக்கப்பட்டது

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

www.winmeen.com

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

28. இவற்றில் வைணவ அகமங்கள் பற்றிய தவறான கூற்று எது?

A) பாஞ்சராத்ராகமம், வைகாணஸாகமம் ஆகிய ஆகமங்களுக்கும் அதிகம் பேதமில்லை

B) ஆலய பூஜாவிதிகளிலும், தினசரியைகளிலும் சிறிது பேதமுண்டு

C) ஆலய பூஜைவிதிகளிலும், தினசரியைகளிலும் சிறிதும் பேதமில்லை

D) வைகானஸாகமம் விகனஸர் என்ற மகரிஷியின் மூலமாக உபதேசிக்கப்பட்டது.

29. இவற்றில் எந்த கோவிலின் வைகானஸ ஆகமத்தை ஒட்டி பூஜை முதலியன நடைபெற்று வருகிறது?

A) திருநாராயணபுரம் B) ஸ்ரீரங்கம்

C) காஞ்சிபுரம் D) திருப்பதி

30. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க

கூற்று : பாஞ்சராத்ரம் என்பது பகவானால் உபதேசிக்கப்பட்டது.

காரணம் : ஒரு யாகத்தின் இடையில் ஐந்து இரவுகளில் பகவானால் உபதேசிக்கப்பட்டது பாஞ்சராத்ரம் ஆகும்.

A) கூற்று மற்றும் காரணம் சரி. மேலும் கூற்றுக்கான காரணம் சரி

B) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் கூற்றுக்கான காரணம் தவறு

C) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு

D) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி

31. பாஞ்சராத்ரம் ஆகமத்தில் எந்த பாகம் உள்ளடக்கியவை?

A) பஞ்ச பூதங்கள், புத்தி

B) துஹங்காரம், துவ்வியக்தம்

C) பஞ்ச தன்மாத்திரைகள்

D) இவை அனைத்தும்

32. பாஞ்சராத்ராகமங்களில் விளக்கப்பட்டுள்ளவை

(i) தேவாலயங்களுக்கென்று ஏற்பட்ட தலங்கள், தேவாலய நிர்மானங்கள்

(ii) விக்கிரகப் பிரதிஷ்டாக் கிரமங்கள், புஜாகாலங்கள்

(iii) புஜாதிரவியங்கள், உத்ஸவாதிகள்

(iv) ஸம்ப்ரோட்சணாதிகள், பூஜை செய்பவர்களின் யோக்கிய தாம்சங்கள்

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) அனைத்தும் சரியானவை

B) (i) மற்றும் (ii)

C) (ii) மற்றும் (iii)

D) (iii) மற்றும் (iv)

33. ஆகமங்களால் சொல்லப்படும் பொருள்களில் மிகவும் முக்கியமானவை

A) மந்திரங்கள் B) தந்திரங்கள்

C) முத்திரைகள் D) இவை அனைத்தும்

34. சைவத் திருமுறைகள் எத்தனை

A) எட்டு B) பத்து

C) பனிரெண்டு D) பதினான்கு

35. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

அருளியவர்கள் தேவாரதிருமுறைகள்

A) திருஞானசம்பந்தர் - 1,2,3

B) திருநாவுக்கரசர் - 4,5,6

C) மாணிக்கவாச்கர் - 7

D) திருமூலர் - 10

36. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

அருளியவர்கள் திருமுறைகள்

A) சுந்தரமூர்த்தி - 7

B) மாணிக்கவாசகர் - 8

C) சேக்கிழார் - 9

D) திருமூலர் - 10

37. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

**நூல்களும் திருமுறைகளும்**

A) திருவிசைப்பா - எட்டாம் திருமுறை

B) திருப்பல்லாண்டு - ஒன்பதாம் திருமுறை

C) திருவாலவாயுடையார் - பதினோராம் திருமுறை

D) திருத்தொண்டர் புராணம் - பனிரெண்டாம் திருமுறை

38. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.

(i) திருமுறை என்பதற்குத் தம்மை அடைந்தவர் களைச் சிவமேயாக்குகின்ற முறையெனப் பொருள் கூறலாம்.

(ii) முதல் ஐந்து திருமுறைகள் தேவாரம் எனப்படும்.

(iii) திருத்தொண்டர் புராணம் பன்னிரெண்டாம் திருமுறையாகும். இதில், அறுபத்து மூன்று நாயன்மார்களது வரலாறு கூறப்பட்டுள்ளது.

கூற்றுகளில் தவறானது எது/எவை?

A) மூன்றும் தவறானவை

B) (i) மட்டும் தவறானவை

C) (ii) மட்டும் தவறானவை

D) (iii) மட்டும் தவறானவை

39. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க

கூற்று : தேவாரத்தை தேவனிடத்தில் அன்பு செலுத்துவதற்குரிய நூலெனப் பொருள் கூறுவர்

காரணம் : தே என்பதற்கு தெய்வம் எனவும் ஆரம் என்பதற்கு மாலை எனவும் பொருள் கொண்டு 'தேவனுக்குரிய பாமாலை' எனப் பொருள் கூறுவர்.

A) கூற்று மற்றும் காரணம் சரி. மேலும் கூற்றுக்கான காரணம் சரி

B) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் கூற்றுக்கான காரணம் தவறு

C) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு

D) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி

40. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

A) போப்பையர்

B) பொன்னம்பலம்

C) ராமநாதன் D) பிலிப்ஸ்

www.winmeen.com

41. இவர்களில் யார் திருமுறைகளில் உள்ள சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவில்லை?
A) பொன்னம்பலம் B) வீரமாமுனிவர்
C) ராமநாதன் D) பிலிப்ஸ்

42. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) திருவாசகம் என்பதற்கு தெய்வத்தன்மை வாய்ந்த வாசகங்களாலாகிய நூல் என்பது பொருள்.
(ii) வைணவ சமயத்தில் விஷ்ணுவை தமிழ்ப் பாமாலைகளால் வழிபட்டவர்கள் ஆழ்வார்கள் ஆவர்.
(iii) ஆழ்வார்கள் மொத்தம் பதிமூன்று பேர்.
இவற்றில் தவறானது எது/எவை?
A) மூன்றும் தவறானவை
B) (i) மட்டும் தவறானது
C) (ii) மட்டும் தவறானது
D) (iii) மட்டும் தவறானது

43. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) வேதங்கள் - 5
B) ஆகமம் - 28
C) திருமுறை - 12
D) சாத்திரம் - 14

44. பதினான்கு சாத்திரங்களில் தலைசிறந்தது எது?
A) இருபா இருபது B) சிவஞான போதம்
C) உண்மை விளக்கம் D) திருவுந்தியார்

45. சாத்திரம் என்பதுடன் பொருத்தமானது எது?
A) சைவ சித்தாந்த சாத்திரங்கள்
B) மெய்கண்ட சாத்திரங்கள்
C) பதினான்கு
D) இவை அனைத்தும்

46. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) சிவம் என்றால் ஒப்பற்ற மெய்ப்பொருள்
(ii) ஞானம் என்றால் அதனை அறிதல்
(iii) போதம் என்றால் தெளிதல்
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

47. கீழ்க்காண்பவற்றில் எது சரியாக பொருந்தவில்லை?

| **சாத்திரங்கள்** | **இயற்றியவர்கள்** |
|---|---|
| A) திருவுந்தியார் | - திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார் |
| B) சிவஞானபோதம் | - உமாபதி சிவம் |
| C) சிவஞான சித்தியார் | - உமாபதி சிவம் |
| D) உண்மை விளக்கம் | - மனவாசகம் கடந்தார் |

48. இவற்றில் எந்த சாத்திரங்கள் உமாபதி சிவம் இயற்றவில்லை?
A) இருபா இருபது, திருக்களிற்றுப்படியார்
B) சிவப்பிரகாசம், திருவருட்பயன்
C) வினா வெண்பா, போற்றிபஃறொடை
D) கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது

49. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) சிவஞானம் போதம் என்றால் ஒப்பற்ற மெய்ப் பொருளாகிய கடவுளை அறிந்து தெளிதலுக்குரிய நூல் எனப் பொருள்படும்.
(ii) சிவஞானபோதம் மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப்பட்டது.
(iii) சிவஞானபோதத்தில் பன்னிரெண்டு சூத்திரங்கள் உள்ளன.
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

50. இவற்றில் எவை அருணாந்தி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்ட சாத்திரங்கள்
A) திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்
B) சிவஞான சித்தியார், இருபா இருபது
C) உண்மை விளக்கம், சிவப்பிரகாசம்
D) சிவஞானபோதம், கொடிக்கவி

51. திருக்களிற்றுப்படியார் சாத்திர நூலை இயற்றியவர் யார்?
A) உமாபதி சிவம்
B) மெய்கண்ட தேவநாயனார்
C) திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்
D) அருணந்தி சிவாச்சாரியார்

52. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) பதியின் உண்மை முதற்சூத்திரம்
(ii) பதியின் சிறப்பிலக்கணம் இரண்டாம் சூத்திரம்
(iii) பதியின் பொது இலக்கணம் ஆறாம் சூத்திரம்
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

53. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) பாச உண்மை முதற் சூத்திரம்
(ii) பாசத்தின் பொது இலக்கணம் மூன்றாம் சூத்திரம்
(iii) பாசத்தின் சிறப்பிலக்கணம் ஐந்தாம் சூத்திரம்
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

54. கீழ்க்கண்டவற்றுள் எது பொருத்தமற்ற இணை?
A) பதியின் உண்மை - முதற்சூத்திரம்
B) பதியின் பொது இலக்கணம் - இரண்டாம் சூத்திரம்
C) பதியின் சிறப்பிலக்கணம் - ஆறாம் சூத்திரம்
D) பசுவின் பொது இலக்கணம் - ஏழாம் சூத்திரம்

55. இவற்றில் பொருந்தாத இணை எது?
A) பசுவின் உண்மை - நான்காம் சூத்திரம்

B) பாசத்தின் உண்மை - இரண்டாம் சூத்திரம்

C) பாசத்தின் பொது இலக்கணம் - நான்காம் சூத்திரம்

D) பாசத்தின் சிறப்பிலக்கணம் - ஐந்தாம் சூத்திரம்

56. கீழ்க்காண்பவற்றுள் பொருத்தமான இணை எது/எவை?

(i) ஞானத்தினை உணரும் முறை - ஏழாம் சூத்திரம்

(ii) ஆன்ம சுத்தி - எட்டாம் சூத்திரம்

(iii) சிவப்போற்றி - பதினொன்றாம் சூத்திரம்

(iv) அணைந்தோர் தன்மை - பன்னிரண்டாம் சூத்திரம்

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) (i) மற்றும் (ii)

B) (ii) மற்றும் (iii)

C) (iii) மற்றும் (iv)

D) (i), (ii) மற்றும் (iv)

57. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?

A) சிவப்போற்றி - பதினொன்றாம் சூத்திரம்

B) ஞானம் - ஐந்தாம் சூத்திரம்

C) அணைந்தோர் தன்மை - பன்னிரண்டாம் சூத்திரம்

D) ஆன்ம சுந்தரி - ஒன்பதாம் சூத்திரம்

58. இவற்றில் சிவஞானபோதத்திற்கான உரைநூல் எது?

A) பாண்டிப் பெருமாள் விருத்தி

B) சிவஞானபோதச் சிற்றுரை

C) சிவஞானபோத மாபாடியம்

D) இவை அனைத்தும்

59. சிவஞானபாடியம் இவ்வாறு அழைக்கப்படுகிறது

A) பெருமாள் விருத்தி

B) சிவஞானபோதச் சிற்றுரை

C) ஆரிய மகாபாடியம்

D) திராவிட மகாபாடியம்

60. மாதவச் சிவஞான சுவாமிகள்

(i) சிவஞானபோத மாபாடியத்தை எழுதியவர்

(ii) விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்தவர்

(iii) திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவர்

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) மூன்றும் சரியானவை

B) (i) மட்டும் சரியானது

C) (ii) மட்டும் சரியானது

D) (iii) மட்டும் சரியானது

61. இவர்களில் சிவஞானபோதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள்?

A) ஹாய்சிங்டன், பையட்பாதிரியார்

B) கார்டன் மாத்யூஸ், நல்லசாமிப்பிள்ளை

C) டேவிட் நவமணி நாடார், சிவபாத சுந்தரம்

D) அனைவரும்

62. சிவஞான சித்தியார்

(i) சிவஞானபோதத்திற்கு அடுத்தபடியாக திகழும் நூல்

(ii) சிவஞானபோதத்தைத் தழுவி எழுதப்பட்ட நூல்

(iii) இதனை இயற்றியவர் அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள்

(iv) அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் மெய்கண்டாரின் தந்தையின் குரு. மெய்கண்டாரின் மாணவரானார்.

கூற்றுகளில் சரியானது எது/எவை?

A) அனைத்தும் சரியானவை

B) (i) மற்றும் (ii)

C) (ii) மற்றும் (iii)

D) (iii) மற்றும் (iv)

63. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க

கூற்று : சிவஞான சித்தியார் சுபக்கம், பரபக்கம் இரு பிரிவுகளை கொண்டது.

காரணம் : சிவஞான சித்தியாருக்கு சிவஞான யோகியாரும் திருவாவடுதுறை ஆதினத்தில் பதினாறாம் பட்டத்தில் வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகரும் உரைகளை எழுதினர்.

A) கூற்று மற்றும் காரணம் சரி. மேலும் கூற்றுக்கான காரணம் சரி

B) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் கூற்றுக்கான காரணம் தவறு

C) கூற்று சரி. ஆனால் காரணம் தவறு

D) கூற்று தவறு. ஆனால் காரணம் சரி

64. இவர்களில் சுபாக்கத்திற்கு தனியாக உரை எழுதியவர்

A) அழகிய தேசிகர்

B) மறைஞான தேசிகர்

C) சிவாக்கிரயோகி ஞானப்பிரகாசர்

D) அனைவரும்

65. சிவஞான சித்தியரை இந்தி மொழியில் வெளியிட்டவர்

A) சிவராமன் B) டாக்டர் கிராண்ட்

C) நல்லசாமிப் பிள்ளை D) பிடி. ஜெயின்

66. சிவஞான சித்தியாரின் பெரும்பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

A) டாக்டர் கிராண்ட்

B) நல்லசாமி பிள்ளை

C) சிவராமன் D) அனைவரும்

67. கீழ்க்காண்பவற்றுள் எது சரியாக பொருந்துகிறது?

A) சிவஞானபோதம் ஆங்கிலம் - அருணந்தி சிவாச்சாரியார்

B) சுபாக்கம் - மறைஞான தேசிகர்

C) பரபக்கம் - அழகிய தேசிகர்

D) சிவஞான சித்தியார் - தம்பிரான் சுவாமிகள்

68. குருவுக்கும் மாணவனுக்கும் உள்ள சம்பாடணை முறையில் சைவசித்தாந்தக் கருத்துகள் வெளியிடப் பட்ட நூல் எது?

A) இருபா இருபது B) சிவஞான சித்தியார்

C) திருவுந்தியார் D) உண்மை விளக்கம்

69. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.

(i) திருவுந்தியாரின் தசமார்க்கம் நன்கு விளக்கப்பட்டுள்ளது

(ii) திருவுந்தியாரை தழுவி வெளிவந்ததே திருக்களிற்றுப்படியாராகும்.
(iii) உண்மை விளக்கம் சித்தாந்த உண்மைகளை நன்கு விளக்குகிறது www.winmeen.com
கூற்றுகளில் தவறானது எது/எவை?
A) மூன்றும் தவறானவை
B) (i) மட்டும் தவறானது
C) (ii) மட்டும் தவறானது
D) (iii) மட்டும் தவறானது

70. சிவபிரகாசம் பற்றிய தவறானக்கூற்று எது?
A) சிவப்பிரகாசம் சிவஞானபோதத்தின் சார்பு நூலாகும்
B) சைவ நூல்களின் இயல்பும், தீட்சை வகைகளும் இதில் கூறப்பட்டுள்ளன
C) இது பொது, சிறப்பு என இருவகைப்படும். ஆயிரம் விருத்தங்களால் ஆகியது.
D) பசு, பதி, பாச இலக்கணம் நன்கு இதில் கூறப் பட்டுள்ளது

71. திருவருட்பயன் வினாவெண்பா பற்றிய தவறானக் கூற்று எது?
A) திருக்குறள் போன்று குறள் வெண்பாக்களால் ஆகியது.
B) இருபது அதிகாரங்களை உடையது. இருநூறு பாக்களைக் கொண்டது
C) வினா வெண்பா உமாபதி சிவம் தம் குருநாதராகிய மறைஞான சம்பந்தரிடம் சாத்திர உண்மைகளை வினவும் முறையில் எழுதப்பட்டது.
D) வினாவெண்பா போற்றிப் பஃறொடை தமக்கு சிவஞானம் நல்கிய குருமூர்த்தியை வாழ்த்திய பாடல்கள் அடங்கியவை.

72. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) கொடிக்கவி சில மந்திரங்களின் இயல்பை உணர்த்துவது
(ii) நெஞ்சுவிடு தூது ஆசிரியர் தம் குருவிடம் மாலை வாங்கிவரும்படி தனது நெஞ்சு விடும் முறையில் பாடப்பட்டது.
(iii) உண்மை நெறி விளக்கம் முற்கூறிய தசகாரியங்களை விளக்குவது
(iv) சங்கற்ப நிராகரணம் சமயக் கொள்கைகளைக் கூறி வேற்றுச் சமயக் கொள்கைகளின் வேறுபாடுகளை விளக்குவது.
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) (i) மற்றும் (ii) B) (ii) மற்றும் (iii)
C) (iii) மற்றும் (iv) D) அனைத்தும்

73. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?

| நூலும் | கருத்தும் |
|---|---|
| A) கொடிக்கவி | மந்திரங்களின் இயல்பு |
| B) நெஞ்சுவிடு தூது | தில்லைக்கொடி ஏற்றியது |
| C) உண்மை நெறிவிளக்கம் | தசகாரியங்கள் விளக்கம் |
| D) சங்கற்ப நிராகரணம் | வேற்று சமயக்கொள்கை |

74. கீழ்க்காண்பவற்றுள் பொருத்தமற்ற இணை எது?
A) இராமாயணம் - வால்மீகி
B) பாரதம் - வியாசர்
C) பகவத் கீதை - பாரதம்
D) ஐந்தாம் வேதம் - இராமாயணம்

75. ஐந்தாம் வேதம் என சிறப்பிக்கப்படும் நூல் எது?
A) இராமாயணம் B) மகாபாரதம்
C) பகவத்கீதை D) பாகவதம்

76. இதிகாசம்
(i) ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு என்று பொருள்
(ii) வேத உபநிஷதங்களின் உட்பொருளை அடக்கிக் கதை வடிவத்தில் இவை எழுதப் பட்டுள்ளன.
(iii) இராமாயணமும், பரதமும் இதிகாசங்களாகும்
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானவை
C) (ii) மட்டும் சரியானவை
D) (iii) மட்டும் சரியானவை

77. புராணம்
(i) பழைய வரலாறுகள் என்பது பொருள்
(ii) எழுதியவர் சூதபுராணிகள்
(iii) இதனை உலகிற்கு உதவியவர் வேதவியாஸர்
(iv) புராணங்கள் பதினெட்டாகும்
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) (i) மற்றும் (iii) B) (ii) மற்றும் (iv)
C) (i) மற்றும் (iv) D) (ii) மற்றும் (iii)

78. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தியுள்ளது?
புராணங்கள்
A) சிவபுராணம் - கூர்மம்
B) விஷ்ணு புராணம் - மச்சம்
C) பிரமன் புராணம் - காருடம்
D) அக்கினி புராணம் - பிரம கைவர்த்தம்

79. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?
A) சூரிய புராணம் - பதுமம்
B) பிரமன் புராணம் - பிர்மம்
C) விஷ்ணு புராணம் - பாகவதம்
D) சிவபுராணம் - வாமனம்

80. 'ஸத்யம்வத', 'தர்மம்சர' என கூறுவது
A) இதிகாசம் B) புராணம்
C) வேதம் D) சைவ சித்தாந்தம்

81. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) பிரமம் என்ற ஒரு பொருளே உளது. ஜீவர்களும் பிரமமே ஆவர்.
(ii) கடவுளும், உயிர்களும் உள்ள பொருள்கள்; அவை வேறுவேறாக இருக்கின்றன.
(iii) கடவுளும், உயிர்களும் வெவ்வேறு எனினும் உயிர்களும் கடவுளின் பரிணாமமே.
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை

www.winmeen.com

B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

82. சமயங்கள் இவ்வாறு பகுக்கப்பட்டுள்ளது
A) புறப்புறச் சமயங்கள். புறச் சமயங்கள்
B) அகப்புறச் சமயங்கள்
C) அகச் சமயங்கள்
D) இவை அனைத்தும்

83. கடவுள் இல்லையெனக் கூறும் மதம்
A) உலகாயதம், பௌத்தம்
B) சமணம்
C) சாக்கியம், மீமாம்ஸம்
D) இவை அனைத்தும்

84. இவற்றில் தவறான கூற்று எது?
A) உடம்பினுள் இருக்கும் உயிரே ஆன்மாவாகும்
B) அந்தக்கரணங்கள், பிராணன் முதலியவையே ஆன்மா
C) ஆன்மா என்பது தனியாக உடம்பினுள் அமைந்திருக்கிறது
D) கடவுளும், ஆன்மாவும், உலகமும் வேறு வேறு.

85. சாருவாகம் என்பது
(i) கண்ணால் கண்டதையே நம்புவது
(ii) காட்சிவாதம் என அழைக்கப்படுவது
(iii) நாஸ்திகவாதம் என அழைக்கப்படுவது
கூற்றுகளில் சரியானது எது/எவை?
A) மூன்றும் சரியானவை
B) (i) மட்டும் சரியானது
C) (ii) மட்டும் சரியானது
D) (iii) மட்டும் சரியானது

86. இவற்றில் சமண மதத்தை குறிப்பது
A) ஆருகதம் B) மாத்தியமிகம்
C) யோகசாரம் D) சௌந்திராந்திகம்

87. இவர்களில் அருகக் கடவுள் யார்?
A) புத்தன் B) அநாதிசித்தன்
C) முத்தன் D) பெத்தன்

88. சமண மதத்தில் கூறப்படும் பொருட்கள் எத்தனை?
A) நான்கு B) ஐந்து
C) ஆறு D) ஏழு

89. இவற்றில் எவை சமணத்துடன் பொருத்தமற்றவை?
A) வைபாடிகம், யோக சாரம்
B) சீவன், அசீவன்
C) ஆச்சிரவம், சமுவரம்
D) நிர்ச்சரம், பந்தம்

90. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க.
(i) அநாதி சித்தன் அருகக் கடவுள்
(ii) சமுவரம் ஆசாபாசம் நீக்கிக் கட்டறுத்தவன்
(iii) பெத்தன் ஆசை முதலியவற்றால் கட்டுண்டவன்
இவற்றில் தவறானது எது/எவை?
A) மூன்றும் தவறானவை
B) (i) மட்டும் தவறானது
C) (ii) மட்டும் தவறானது
D) (iii) மட்டும் தவறானது

91. "ஞானம் கெட்டபோது கல்போல் கிடப்பதே முத்தி" என்பது
A) சாங்கியம் B) பட்டாசாரியின் மதம்
C) பிரபாகரன் மதம் D) சமணம்

92. "சொர்க்க முக்தியே முத்தி. இந்த முத்தியில் ஒருவகை ஆனந்தம் உண்டு" என்பர்
A) பௌத்தம் B) சமணம்
C) பட்டாசாரியின் மதம் D) பிரபாகரன் மதம்

93. இவற்றில் பொருத்தமற்ற இணை எது?
A) புத்தமதம் - புத்தர்
B) சமணம் - மகாவீரர்
C) சாங்கியம் - கபிலர்
D) மீமாம்ஸம் - புருடன்

94. இவற்றில் எது குருமதம் எனப்படுகிறது?
A) பௌத்தம் B) சமணம்
C) சாங்கியம் D) பிரபாகரன் மதம்

95. யார் ஞானகாண்டத்தை இகழ்ந்து கர்மகாண்டத்தைக் கைக்கொள்வர்
A) மீமாம்சகர் B) பட்டன் மதத்தினர்
C) பிரபாகர மதத்தினர் D) சாங்கியர்

96. 'வேதம் அநாதி' எதை தருமென மீமாம்சகர் கூறுகின்றார்?
A) பிராமணம் B) வினை
C) மோட்சம் D) இவை அனைத்தும்

97. கீழ்க்காண்பவற்றில் எது சரியாக பொருந்தவில்லை?
A) அத்வைதம் - சங்கரபகவத்
B) விசிஷ்டாத்வைதம் - நீலகண்ட சிவாச்சாரியார்
C) துவைதம் - மத்வாசாரியர்
D) வேசேடிகம் - கணாதர்

98. இவர்களில் நியாயம் இயற்றியவர்?
A) பதஞ்சலி முனிவர் B) கபிலர்
C) அக்கபாதர் D) கணாதர்

99. இவற்றில் பதஞ்சலி முனிவரால் இயற்றப்பட்டது
A) யோகம் B) நியாயம்
C) துவைதம் D) அத்வைதம்

100. இவற்றில் வேதாந்த மதம் என அழைக்கப்படுவது?
A) அத்வைதம் B) விசிஷ்டாத்வைதம்
C) துவைதம் D) துவைதாதுவைதம்

101. பிரம்ம சூத்திரத்திரம் இயற்றியவர்?
A) சங்கரர் B) இராமாநுஜர்
C) மத்வாசாரியார் D) வேதவியாசர்

102. இது சேர்ந்தது பிரஸ்தானத் திரயம் எனப்படும்
A) பிரம்ம சூத்திரம் B) பகவத் கீதை
C) தசோபநிஷத் D) இவை அனைத்தும்

103. சங்கரர்
(i) வேதவியாசர் இயற்றிய பிரமசூத்திரத்திற்கு பாஷ்யம் இயற்றினார்
(ii) பகவத்கீதைக்கு பாஷ்யம் இயற்றினார்
(iii) தசோபநிஷத்துகளுக்கு அத்வைத சித்தாந்தப்படி பாஷ்யம் இயற்றினார்

www.winmeen.com

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | A | 2. | C | 3. | D | 4. | C | 5. | A | 6. | A | 7. | A | 8. | D | 9. | C | 10. | B | 11. | D | 12. | B |
| 13. | D | 14. | B | 15. | A | 16. | B | 17. | D | 18. | C | 19. | A | 20. | B | 21. | A | 22. | D | 23. | C | 24. | D |
| 25. | D | 26. | C | 27. | A | 28. | C | 29. | D | 30. | A | 31. | D | 32. | A | 33. | D | 34. | C | 35. | C | 36. | C |
| 37. | A | 38. | C | 39. | A | 40. | A | 41. | B | 42. | D | 43. | A | 44. | B | 45. | D | 46. | A | 47. | C | 48. | A |
| 49. | A | 50. | B | 51. | C | 52. | B | 53. | D | 54. | D | 55. | A | 56. | C | 57. | B | 58. | D | 59. | D | 60. | A |
| 61. | D | 62. | A | 63. | B | 64. | D | 65. | D | 66. | D | 67. | B | 68. | A | 69. | B | 70. | C | 71. | B | 72. | D |
| 73. | B | 74. | D | 75. | B | 76. | A | 77. | C | 78. | A | 79. | A | 80. | C | 81. | A | 82. | D | 83. | D | 84. | B |
| 85. | A | 86. | A | 87. | B | 88. | D | 89. | A | 90. | C | 91. | C | 92. | C | 93. | D | 94. | D | 95. | A | 96. | D |
| 97. | B | 98. | C | 99. | A | 100. | A | 101. | D | 102. | D | 103. | A | 104. | C | 105. | C | 106. | D | 107. | D | 108. | B |

www.winmeen.com